**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.104** **நாள்: 28.07.2019**

**பெருநகர சென்னை மாநகராட்சியில் மண்டலம்-11, மவுண்ட் பூந்தமல்லி சாலை, போரூர் ஏரியில் ''பிளாக்கிங்'' (Plogging) உடற்பயிந்சி முறையில் பொதுமக்களின் பங்களிப்புடன் நடைபெற்ற தூய்மை பணியில் 3.5 மெட்ரிக் டன் குப்பை சேகரிக்கப்பட்டது.**

பெருநகர சென்னை மாநகராட்யில் தூய்மையை பராமரிக்க மாணபுமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரிலும், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்களின் வழிகாட்டுதலின் படியும் குப்பைகளை தரம் பிரித்து, சேகரித்து, மறுசுழற்சி செய்யவும், தமிழ்நாடு அரசால் தடைசெய்யப்பட்டுள்ள ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்துவதை முற்றிலும் தவிர்க்கவும் பல்வேறு விதமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக, பெருநகர சென்னை மாநகராட்சியில் பொதுமக்களின் பங்களிப்புடன் பொது இடங்களை தூய்மையாக பராமரிக்க ''பிளாக்கிங்'' (Plogging) உடற்பயிற்சி முறையில் விழிப்புணர்வு ஏற்படுத்த **''சென்னை பிளாக்கிங் சவால்-2019''** (Chennai Plogging Challenge -2019) என்ற **நி**கழ்ச்சி 14.07.2019 அன்று முதன் முறையாக பெருநகர சென்னை மாநகராட்சியால் மண்டலம்-13ல் உள்ள எலியட்ஸ் கடற்கரை பகுதியில் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. இதில் பல்வேறு பொது நல அமைப்புகள் மற்றும் பொது மக்கள் பெருமளவு கலந்து கொண்டனர்.

பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் **''பிளாக்கிங்'' (**Plogging) என்ற நடந்து, நின்று, குனிந்து, உட்கார்ந்து கோணிப்பையில் குப்பை சேகரிக்கும் சவால் பயிற்சியை சென்னை மாநகராட்சியில் பொதுமக்கள் அதிக நடமாட்டம் உள்ள பகுதிகளிலும், உடற்பயிற்சி மேற்கொள்ளும் இடங்களிலும், நடத்தி, இதனை ''பொதுமக்களின் தூய்மை இயக்கமாக'' தொடர்ந்து செயல்படுத்த அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

அதனை தொடர்ந்து இன்று (28.07.2019) மண்டலம்-11, மவுணட் பூந்தமல்லி சாலை, போரூர் ஏரியில் நடைபெற்ற **சென்னை பிளாக்கிங் சவால்-2019 நிகழ்ச்சியை** பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையாளர் (சுகாதாரம்) திரு.பி.மதுசுதன் ரெட்டி, இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்து தூய்மை பணிகளில் ஈடுபட்டார்.

சீரான ஓடுபயிற்சி மேற்கொள்ளும்போதே இடையிடையே நின்று, குனிந்து, உட்கார்ந்து கோணிப்பையில் குப்பையை சேகரிக்கும் ஒரு உடற்பயிற்சி தொகுப்பு முறையே ''பிளாக்கிங்'' (Plogging) ஆகும். **இன்று நடைபெற்ற ''சென்னை பிளாக்கிங் சவால்-2019'' (Chennai Plogging Challenge -2019) நிகழ்ச்சியில், 612 நபர்கள் கலந்து கொண்டு பிளாக்கிங் உடற்பயிற்சி மூலம் மவுண்ட் பூந்தமல்லி சாலை, போரூர் ஏரியை சுற்றியுள்ள பகுதிகளில் தூய்மை பணியில் ஈடுபட்டு சுமார் 3.5 மெட்ரிக் டன் குப்பைகளை சேகரித்தனர்.**

மேலும் இந்நிகழ்ச்சி நடைபெற்ற பகுதியில் உள்ள பொதுமக்களிடையே மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் அமைப்பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தவும், குப்பையை மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தரம் பிரித்து வழங்க விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலும் கண்காட்சி அரங்குகள் அமைக்கப்பட்டிருந்தன.

இந்நிகழ்ச்சியில் தெற்கு வட்டார துணை ஆணையாளர் டாக்டர் ஆல்பி ஜான் வர்கீஸ், இ.ஆ.ப., அவர்கள் மண்டல அலுவலர் திருமதி சசிகலா செயற்பொறியாளர்கள், தன்னார்வலர்கள் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர், மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**